# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:151** **தேதி:05.07.2014**

### ஊதிய நிர்ணய பிரச்சனை

அன்பார்ந்த தோழர்களே,

01.10.2000க்கு முன் பதவி உயர்வு பெற்று, 01.10.2000க்கு பின் ஆண்டு ஊதிய உயர்வு பெறும் ஊழியர்களின் ஊதிய நிர்ணயத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக உருவான பிடித்தத்தை நிறுத்த வேண்டும் என நமது மத்திய சங்கம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கத்தை கீழே கொடுத்துள்ளோம்.

”01.10.2000க்கு பின் பதவி உயர்வு பெற்று, அதற்கு பின் ஆண்டு ஊதிய உயர்வு பெறும் ஊழியர்களின் ஊதிய நிர்ணயத்தில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக உருவான ஊதிய பிடித்தத்தை நிறுத்தும்படி தலமட்ட நிர்வாகங்களுக்கு, 01.07.2014 தேதியிட்ட கடித எண் 1-15/2011-PAT(BSNL) மூலம் வழிகாட்டியதற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். எனினும், இந்தக் கடிதம் ஒரு பகுதி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே நிவாரணம் கொடுத்துள்ளது.

மற்றொரு பகுதி தொழிலாளர்கள், 01.10.2000க்கு முன் பதவி உயர்வு பெற்று, 01.10.2000க்கு பின் ஆண்டு ஊதிய உயர்வு பெறும் ஊழியர்களாக உள்ளனர். இந்த பகுதி தொழிலாளர்களுக்கும் ஆண்டு ஊதிய உயர்வு பெறும் தேதியில் ஊதிய நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர்களின் ஊதிய பிடித்தமும் நிறுத்தப்பட வேண்டும் என எங்கள் சங்கம் உறுதியாக கோரி வருகிறது. 17ஆவது நிலைக்குழுவின் நிகழ்வுகள் குறித்து 2012, மார்ச் 12ஆம் தேதி வெளியிடப்பட்ட கார்ப்பரேட் அலுவலக கடித எண்.BSNL/39-5/SR/2011ஐ உங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மேலே சொல்லப்பட்ட பிரச்சனை தொடர்பாக ஊழியர் தரப்பு கொடுத்துள்ளதை கீழே கொடுத்துள்ளோம்:

**பிரச்சனை எண்:2.13:- 01.10.2000க்கு முன் பதவி உயர்வு தேதியும், 01.10.2000க்கு பின் ஆண்டு ஊதிய உயர்வு தேதியும் உள்ளவர்களுக்கு அடுத்த ஆண்டு ஊதிய் உயர்வு தேதியில் பதவி உயர்விற்கான ஊதிய நிர்ணயம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிப்பது.**

01.07.2014 தேதியிட்ட உங்களின் கடிதம் ஒரு பகுதி நிவாரணம் மட்டுமே கொடுத்துள்ளதால், 01.10.2000க்கு முன் பதவி உயர்வு பெற்று, 01.10.2000க்கு பின் அடுத்த ஆண்டு ஊதிய உயர்வு பெற உள்ளவர்களுக்கு அடுத்த ஆண்டு ஊதிய உயர்வு தேதியில் ஊதிய நிர்ணய விருப்பம் தெரிவித்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய பிடித்தத்தை நிறுத்தி வைக்குமாறு தலமட்ட நிர்வாகங்களுக்கு தாங்கள் வழி காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். விரைவில் இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.”

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்.**